







# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : கீ ப ரா வி

மலர் 1 இதழ் 20 14.05.2025


सुनैना माता द्वारा श्रीजानकी जी
गराउदै

# உள்ளே....

## படித்து பின்பற்ற வேண்டிய

## முக்கிய 60 விஷயங்கள்

*****************

# உபதேசங்கள்



ஸ்ரீ:



ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# முக்கிய விஷயங்கள்

(ஸ்ரீமதுபயவே. திருமலை. சதுர்வேத சதக்ரது. நாவல்பாக்கம்.
வாஸுதேவ தாதாசார்ய ஸ்வாமி, திருவனந்தபுரம்.)

ஸ்ரீவைஷ்ணவர்களுக்கான வாழ்க்கைநெறியையும் வாழ்க்கைப் பயனையும் ஸ்வாமிதேசிகன் பல நூல்களில் அத்புதமாகக் காட்டி அருளியுள்ளார். நமக்குத் தேவையானவை எவை; தேவையில்லாதவை எவை என்பதை நாம் அறியச்செய்ய அவர் நிறையவே பாடுபட்டுள்ளார். ஸ்ரீவைஷ்ணவர்கள் ஒவ்வொரு துறையிலும் முக்கியமாகக் கருதவேண்டியது எது என்பதை ப்ரதான - ஶதகம் என்னும் நூலில் ஸாதித்துள்ளார். அதையும், தேசிகன் அருளிய வேறு சில குறிப்புகளையும் அடியொற்றி இந்தக் கட்டுரை அமைகிறது. நமக்குத் தேவையான முக்கிய விஷயங்களை இதில் தொகுத்துள்ளேன். ஸ்ரீதேசிகன் நூற்றுக்கு மேல் முக்கிய விஷயங்களை ஆங்காங்கே அருளியுள்ளார்; அடியேன், அறுபது மட்டுமே விண்ணப்பம் செய்கிறேன்.

## ஜ்ஞானம்

1. நாம் பெறவேண்டிய அறிவுகளில் முக்கியமானது ஶாஸ்த்ரம் படித்துப் பெறும் தத்வ-ஜ்ஞானம் (பெருமாளைப் பற்றிய அறிவு).
2. ஶாஸ்த்ரங்களில் முக்கியமானது வேதம்.
3. வேதத்திலுள்ள பாகங்களில் முக்கியமானது வேதாந்த பாகம். (அது பரப்ரஹ்மத்தை எடுத்துச்சொல்வது).
4. எல்லா வேதங்களிலும் சேர்த்து முக்கியமானது புருஷஸூக்தம்.
5. பரம்பொருளை சரியாகப் புரிந்துகொள்ள உதவும் வேதபாகங்களில் முக்கியமானது நாராயண அநுவாகம். (ஸஹஸ்ரஶீர்ஷம் ...... என்ற அநுவாகம்; அதன் பொருளை ஆசார்யர்களிடம் கேட்டறியவேணும்).
6. வேதக்கருத்தை அறிய உதவும் நூல்களில் முக்கியமானது ஆழ்வார் அருளிச்செயல். (இதிஹாஸங்கள், புராணங்களை விட அருளிச்செயல் முக்கியம்).

## உபாயம்

7. மனிதப்பிறவியின் பல நிலைகளில் முக்கியமானது, அடியேன் எம்பெருமானுக்கு தாஸன் என்று, திருமந்த்ரம் மூலம் உணரும் நிலை. (இதை இவனது புதுப்பிறவி என்பர்).

8. அந்த நிலையில் மனிதன் கைக்கொள்ள வேண்டியதில் முக்கியமானது எம்பெருமானை அடைய உபாயம் செய்தல்.

9. பகவானை அடைய ஜீவர்கள் செய்யக்கூடிய உபாயங்களில் முக்கியமானது ஶரணாகதி.

10. ஶரணாகதியின் ஆறு அங்கங்களில் முக்கியமானது ஸமர்ப்பணம். (தன்னையே ஸமர்ப்பணம் செய்தல், தன்னைக் காக்கும் பொறுப்பை ஒப்படைத்தல், அதன் பலனை ஸமர்ப்பணம் செய்தல் ஆகியவை).

11. ஸமர்ப்பணங்களில் முக்கியமானது பர-ஸமர்ப்பணம்; (அதாவது தன்னைக் காக்கும் பொறுப்பை ஒப்படைத்தல்).

12. ஶரணாகதிக்கான மந்த்ரங்கள் பல உள்ளன. அவற்றில் முக்கியமானது த்வய-மந்த்ரம்.

13. ஶரணாகதியைப் பற்றிச் சொல்லும் நூல்களில் முக்கியமானது ஸ்ரீபாஞ்சராத்ர ஆகமம்.

14. பெருமானிடம் ஶரணாகதி செய்து கேட்டுப் பெறவேண்டிய பலன்களில் முக்கியமானது மோக்ஷம்.

15. மோக்ஷத்தில் பெறும் பலன்களில் முக்கியமானது பகவத் - கைங்கர்யம் (பெருமானுக்குத் தொண்டுபுரிதல்).

# கைங்கர்யம் (இறைத்தொண்டு)

16. இங்கே நாம் செய்யும் கைங்கர்யங்களில் முக்கியமானது ஆஜ்ஞா-கைங்கர்யம். (கட்டாயம் செய்யவேண்டியதாக ஶாஸ்த்ரங்களில் கட்டளை இடப்பட்ட ஸந்த்யாவந்தனம் முதலிய கைங்கர்யம் செய்தல்).
17. ஶாஸ்த்ரங்களைக் கடைபிடிப்பதிலும் முக்கியமானது, நாம் செய்யவேண்டியதாக ஶாஸ்த்ரம் சொன்ன செயலைச் செய்வதைவிட, செய்யக்கூடாததாகச் சொன்னதைத் தவிர்ப்பது.
18. நாமாகச் செய்யும் கைங்கர்யங்களிலும், செயலைவிட, ஜ்ஞானம் (பக்தி) மேலோங்கிச் செய்வது முக்கியமானது.
19. உடலால் செய்யும் கைங்கர்யங்களை விட, காலக்ஷேபம், பாராயணம் முதலிய ஜ்ஞான - கைங்கர்யங்கள் முக்கியமானவை.
20. ஶாஸ்த்ரப்படி அநுஷ்டானத்தால் சிறந்திருப்பதை விட முக்கியமானது, குணங்களால் சிறந்து இருத்தல்.
21. கோயில்களில் செய்யவேண்டியதில் முக்கியமானது, ஆசார்யன் சொற்படி அவர் உகந்த கைங்கர்யம் செய்தல்.
22. கோயில்களில் செய்யக்கூடாததில் முக்கியமானது, பக்தியில்லாத மற்றவர்களை உபசரித்தல்.
23. பெருமானுக்குத் தொண்டு செய்யத் தேவையான பொருள்களில் முக்கியமானவை, நம் மனமும், வாக்கும், உடலும்.
24. தொண்டு செய்யத் தேவையான தகுதிகளில் முக்கியமானது, மனத்தூய்மை.
25. கைங்கர்யம் செய்து தான் உகப்பதை விட முக்கியமானது, அதன் மூலம் வரும் பெருமானது உகப்பே.
26. கைங்கர்யம் செய்யும்போது, பெருமானை உகப்பு கொள்ளச் செய்வதில் முக்கியமானது, அவனிடம் காட்டும் அன்பும் ஆசையும்.
27. கைங்கர்யம் செய்ய ஏற்ற இடங்களில் முக்கியமானது, பாகவதர்கள் பலர் வசிக்கும் திவ்யதேசம்.
28. பெருமானுக்குக் கைங்கர்யம் செய்வதை விட முக்கியமானது, பாகவத கைங்கர்யம்.
29. பாகவத கைங்கர்யங்களில் முக்கியமானது, ஆசார்யனுக்குக் கைங்கர்யம் செய்தல்.

# திரு-ஆராதனம்

30. தினமும் செய்யும் அநுஷ்டானங்களாகிற கைங்கர்யத்தில் முக்கியமானது, பெருமாள் திரு-ஆராதனம்.
31. பகவானை ஆராதனம் செய்வதற்கான மந்த்ரங்களில் முக்கியமானவை, வ்யாபக-மந்த்ரங்கள். (திருவஷ்டாக்ஷரம், வாஸுதேவ - த்வாதஶாக்ஷரம், விஷ்ணு-ஷடக்ஷரம் ஆகிய மூன்று மந்த்ரங்கள்).
32. எல்லா மந்த்ரங்களிலுமே மிக முக்கியமானது, திருமந்த்ரம் (அஷ்டாக்ஷரம்); அதைக்கொண்டு ஆராதனம் செய்யவேண்டும்.
33. பெருமாளுக்கு ஸமர்ப்பிக்கும் புஷ்பம்/இலைகளில் முக்கியமானது, துளசி.
34. பெருமாளுக்கு ஸமர்ப்பிக்கும் பழங்களில் முக்கியமானது, வாழைப்பழம்.
35. துளசி, பழம் முதலிய பொருள்களைச் சேர்ப்பதில் முக்கியமானது, ஶாஸ்த்ர - விரோதம் இல்லாமல், தானே ஸம்பாதித்தல்.
36. புஷ்பம் முதலியவற்றில் முக்கியமானவை, மனத்தால் ஸமர்ப்பிக்கப்படும் புஷ்பங்களான கருணை, பொறுமை, அமைதி, நேர்மை, முதலியவை.

# மனிதருடன் பழகுதல்

37. வாக்கினால் தவிர்க்கவேண்டிய தோஷங்களில் முக்கியமானது பொய் சொல்லுதல்.
38. உடலால் தவிர்க்கவேண்டிய தோஷங்களில் முக்கியமானது பிறரைத் துன்புறுத்தல்.
39. மொத்தத்தில், மனிதர் தவிர்க்கவேண்டிய தோஷங்களில் முக்கியமானது ஆசை. (அதுவே கோபத்துக்கும் காரணமாகிறது).
40. தோஷங்களைத் தவிர்க்கும் வழிகளில் முக்கியமானது, நல்லவரோடு சேர்ந்து வாழ்தல்.
41. மனிதர்களில் கௌரவிக்கப்பட வேண்டியவரில் முக்கியமானவர் ஜ்ஞானம் நிறைந்த பண்டிதர்.

42. மனிதர்களில் அன்பு செலுத்தப்பட வேண்டியவரில் முக்கியமானவர் பக்தி நிறைந்த பாகவதர்.

43. நெருங்கிப் பேசிப் பழக வேண்டியவரில் முக்கியமானவர் விருப்பு-வெறுப்பு அற்ற வைராக்யசீலர்.

44. பயபக்தியுடன் பழகவேண்டியவரில் முக்கியமானவர், தன் பெருமையை வெளிக்காட்டிக்கொள்ளாத மஹான்.

45. பக்தி நிறைந்த பக்தர்களில் முக்கியமானவர் ஏகாந்த-பக்தர். (பிற தெய்வத்தை வணங்காமல் பகவானை மட்டும் வணங்குபவர்).

46. ஏகாந்த - பக்தர்களில் முக்கியமானவர், பரமைகாந்தி. (தனக்கு ஒரு பலனையும் எதிர்பாராமல் பகவானை ஸேவிப்பதே குறிக்கோளாகக் கொண்டவர்; மோக்ஷபலனை மட்டும் விரும்புபவர்).

47. பலவிதமான ஜ்ஞானம் அளிக்கும் குருக்களில் முக்கியமானவர், பெருமானைப் பற்றி உபதேஶம் செய்யும் ஆசார்யன்.

48. உபதேஶம் செய்த ஆசார்யர்கள் பலர் இருக்கும்போது முக்கியமானவர், மோக்ஷஉபாயமான மூலமந்த்ரம், அதன் பொருள் முதலியவற்றை உபதேஶம் செய்பவர்.

## வாழ்க்கைநெறி

49. வாழ்வில் நினைக்கவேண்டியதில் முக்யமானது, ஆசார்யன் செய்த உதவி.

50. மறக்கவேண்டியதில் முக்கியமானது, சிற்றின்ப - அநுபவம்.

51. எப்போதும் சொல்லவேண்டியதில் முக்கியமானது த்வய - மந்த்ரம்.

52. எப்போதுமே சொல்லக்கூடாததில் முக்கியமானது தற்பெருமை.

53. செய்யவேண்டியதில் முக்கியமானது ஆசார்ய - கைங்கர்யம்.

54. செய்யக்கூடாததில் முக்கியமானது பெரியோர்களிடம் அபசாரப்படுதல்.

55. மன்னிக்க முடியாத கொடுமையான அபசாரங்களில் முக்கியமானது ஆசார்யனுக்கு த்ரோஹம் செய்தல்.

56. பெரியோர்களிடம் அபசாரப்பட்டுவிட்டால் செய்யவேண்டியதில் முக்கியமானது அவர்களிடமே மன்னிப்பு கோருதல்.

57. பெருமாளிடம் அபசாரப்பட்டால் செய்யவேண்டியதில் முக்கியமானது அஞ்சலிபந்தம் (கைகூப்புதல்).

58. தவறு செய்தும் வருந்தாத திமிர் பிடித்தவனையும் காப்பாற்றக்கூடியதில் முக்கியமானது, ஆசார்யனது கருணையுள்ளம்.

59. நம் வாழ்வில் பெறக்கூடிய ஸுகங்களில் முக்கியமானது ஸாத்விக-ஸுகம். (ஸத்வ - குணம் அடியாக வரும் ஸுகம்).

60. ஸாத்விக - ஸுகங்களில் முக்கியமானது பகவத்-கைங்கர்ய ஸுகம்; அது மோக்ஷ - ஆனந்தத்துக்கு ஈடானது.